# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**<u>சுற்றறிக்கை எண்:118</u>** **<u>தேதி:-17.07.2016</u>**

### ஊதிய மாற்ற பேச்சு வார்த்தையை உடனே துவங்குக மற்றும் சில செய்திகள்

அன்புள்ள தோழர்களே,

15.07.2016 அன்று மனித வள இயக்குனரை சந்தித்த நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் தொடர்பாக விரைவில் விவாதிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர். 01.01.2007 முதல் அமுலாக்கப்பட்ட ஊதிய மாற்ற பேச்சு வார்த்தைகள் நிறைவு பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனது என்பதை மனித வள இயக்குனரிடம் தெரிவித்தனர். தற்போது பொதுத்துறை நிறுவனங்களுக்கான இலாகா நியமித்துள்ள 3RD PRC என்பது அதிகாரிகளுக்கான ஊதிய மாற்றத்தை பரிந்துரைக்கும். எனவே BSNL நிர்வாகம் ஊதிய மாற்றம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுடன் பேச்சு வார்த்தையை உடனடியாக துவங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் வற்புறுத்தியுள்ளது. இது தொடர்பாக நமது மத்திய சங்கம் கடிதம் ஒன்றையும் வழங்கியுள்ளது. மனித வள இயக்குனர் இது தொடர்பாக கவனிப்பதாக கூறியுள்ளார்.

**ஒன்று பட்ட போராட்டத்திற்கு BSNL ஊழியர் சங்கம் அழைப்பு**:- பண்டிகை காலத்திற்கு ஒரு சில மாதங்களே உள்ளது. புதிய PLI பார்முலாவை உருவாக்கும் கமிட்டியின் கூட்டத்தை கூட்டுவதற்கோ, இந்த ஆண்டு ஊழியர்களுக்கு ஒரு நியாயமான PLI வழங்குவதற்கோ தயாரில்லாத மனநிலையில் தான் நிர்வாகம் உள்ளது. எனவே அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இரண்டும் இணைந்து போராடி ஊழியர்களுக்கு நியாயமான PLI பெற்றுத் தர வேண்டியது தான் காலத்தின் அவசியம். எனவே தேவையற்ற விவாதங்களை தற்போதும் தொடர்வதை கைவிட்டு ஒன்று பட்ட நடவடிக்கைகளுக்கு வரவேண்டும் என NFTE சங்கத்தை நமது மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**JTO LICE தேர்வு முடிவுகள்:-** மனித வள இயக்குனர் திருமிகு சுஜாதா ரே அவர்களை நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS, BSNLEU, தோழர் அனுப் முகர்ஜி GS SNATTA, தோழர் சுனில் கௌவதம் Dy.GS SNATTA ஆகியோர் 15.07.2016 அன்று சந்தித்து, 22.05.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வில் PROVISIONAL ஆக அனுமதிக்கப்பட்ட 2007ஆம் ஆண்டு பிரிவை சார்ந்த அனைத்து Dr.TTAக்களின் தேர்வு முடிவுகளையும் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். 31.12.2007 வரை தேர்வுகள் நடைபெற்ற Dr.TTAக்களின் முடிவுகளை மட்டும் வெளியிடுவது என்று கார்ப்பரேட் அலுவலகம் எடுத்த முடிவு குளறுபடியான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்பதை தெரிவித்தனர். கீழ்கண்ட இரண்டு வாதங்களை தொழிற்சங்க தலைவர்கள் முன்வைத்தனர்:-

1) TTA தேர்வுகளை கடிதம் வெளியிட்ட தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் நடத்த வேண்டும் என அனைத்து தலைமை பொது மேலாளர்களுக்கும் கார்பரேட் அலுவ்லகம்

16.08.2007 தேதியிட்ட தனது கடித எண் 10-1/2007-Rectt மூலம் தெரிவித்திருந்தது. இந்த வழிகாட்டுதல் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டிற்கான TTA தேர்வுகள் 15.02.2018 வரை நடத்தலாம். கார்ப்பரேட் அலுவலகமே இப்படி ஒரு உத்தரவை வெளியிட்ட பின், தற்போது டிசம்பர், 2007 வரை நடைபெற்ற தேர்வில் வெற்றி பெற்ற TTAக்கள் தான் 22.05.2016 அன்று நடைபெற்ற தேர்வினை எழுத தகுதியானவர்கள் என எப்படி சொல்ல முடியும்.

2) 01.01.2008க்கு பின் தேர்வு நடைபெற்று, 30.06.2008க்கு முன் பயிற்சிக்கு சென்றுள்ள பல TTAக்களின் JTO LICE தேர்வு முடிவுகள் ஏற்கனவே வெளியாகிவிட்டது. இப்படி இருக்கையில் டிசம்பர், 2007க்கு முன் தேர்வு நடைபெற்ற TTAக்கள் மட்டுமே 22.05.2016 JTO LICE தேர்வு எழுத தகுதியானவர்கள் என்ற நிலையை நிர்வாகம் எடுக்க முடியாது.

இந்த இரண்டு வாதங்களையும் முன் வைத்து 31.03.2008க்கு முன் TTA தேர்வு எழுதி வெற்றி பெற்ற அனைத்து TTAக்களின் JTO LICE தேர்வு முடிவுகளையும் வெளியிட வேண்டுமென கடுமையாக விவாதித்தனர்.

இந்த வாதங்களை ஏற்றுக் கொண்ட மனிதவள இயக்குனர் ஒரு சாதகமான முடிவினை விரைவில் எடுப்பதாக உறுதி அளித்துள்ளார். மனித வள இயக்குனரின் சாதகமான அணுகுமுறைக்கு நமது மத்திய சங்கம் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளது.

**புது டெல்லியில் நமது மத்திய செயற்குழு**:- BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு 2016, ஜூலை 18 முதல் 30 வரை புது டெல்லியில் நடைபெற உள்ளது. CITU சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் A.K.பத்மநாபன் துவக்க உரை நிகழ்த்த உள்ளார். இந்த துவக்க நிகழ்ச்சியில் நமது கூட்டணி சங்க பொது செயலாளர்களான தோழர் சுரேஷ் குமார் BSNL MS, தோழர் அனூப் முகர்ஜி SNATTA ஆகியோரும் உரை நிகழ்த்த உள்ளனர். அந்த மத்திய செயற்குழுவில் 7ஆவது உறுப்பினர் சரி பார்ப்பு, செப்டம்பர் 2 அகில இந்திய பொது வேலை நிறுத்தம், 8ஆவது அகில இந்திய மாநாடு உள்ளிட்ட விஷயங்கள் விவாதிக்கப்பட உள்ளது.

**"டாக்டர் B.R.அம்பேத்கர் 125"-அகில இந்திய கருத்தரங்கம்**:- அஹமது நகர் மத்திய செயற்குழுவின் முடிவின் படி டாக்டர் B.R.அம்பேத்கர் அவர்களின் 125ஆவது பிறந்த நாள் கருத்தரங்கத்தினை புதுடெல்லியில் உள்ள கர்வால் பவனில் 19.07.2016 அன்று மாலை 16.00 மணிக்கு நடைபெற உள்ளது. [16.07.2016]Seminar on "125th Birth Anniversary of Dr. B.R. Ambedkar" to be held on 19th July, 2016. BSNL ஊழியர் சங்கத்தின் புரவலர் தோழர் V.A.N.நம்பூதிரி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள இந்த கருத்தரங்கில் நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, CITU பொது செயலாளர் தோழர் தபன் சென் மற்றும் தலீத் ஷோசன் விடுதலை முன்னணியை சார்ந்த தோழர் G.மமதா ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**